

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.11.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வழக்கறிஞர் நலநிதியத்திலிருந்து உயிரிழந்த 10 வழக்கறிஞர்களின் குடும்பத்தினருக்கு நிதியுதவி வழங்கிடும் வகையில், அவ்வழக்கறிஞர்களின் வாரிசுதாரர்களுக்கு தலா 10 இலட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 1 கோடி ரூபாய்க்கான காசோலைகளை நிதியுதவியாக வழங்கினார். இந்த நிகழ்வின்போது, சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, நாடாளுமன்ற உறுப்பினரும் மூத்த வழக்கறிஞருமான பி. வில்சன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், சட்டத்துறை செயலாளர் எஸ். ஜார்ஜ் அலெக்சாண்டர், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் பி.எஸ். அமல்ராஜ், இந்திய வழக்கறிஞர் சங்கத்தின் துணைத் தலைவர் எஸ். பிரபாகரன், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்கறிஞர்கள் சங்க துணைத் தலைவர் வி. கார்த்திகேயன் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## தடைகளை உடைப்போம்!

# சமத்துவத்தை நிலைநாட்டுவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, நவ. 14 –

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என கழக அரசு சட்டம் இயற்றி இன்று அர்ச்சகர் பயிற்சியினை முடித்து பலர் அர்ச்சகராக நியமிக்கப்பட்டுள்ளதையடுத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில், அத்தனை தடைகளையும் உடைப்போம்! சமத்துவத்தை நிலைநாட்டுவோம்!' எனக் குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் கூறியுள்ளதாவது:-

**கோயில் இருக்கும் தெருவுக்குள் நுழையாதே என்றார்கள். நுழைந்தோம்! கோயிலுக்குள் நுழையாதே எனத் தடுத்தார்கள். நுழைந்தோம்! கருவறைக்குள் நுழையத் தகுதி உண்டா என ஒதுக்கினார்கள். நுழைவோம் என்று அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகச் சட்டமியற்றினோம்; பயிற்சிப் பள்ளிகள் துவங்கினோம்! பயிற்சி முடித்துப் பலரும் வந்துகொண்டிருக்கிறார்கள். திராவிடம் மகிழ்கிறது! இவர்களைத் தடுக்க ஏற்படுத்தப்படும் அத்தனை தடைகளையும் உடைப்போம்; சமத்துவத்தை நிலைநாட்டுவோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



ஈரோடு வடக்கு மாவட்டக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம் கவுந்தப்பாடி பாவா திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத்தலைவர் ஏ.பெருமாள்சாமி தலைமையில் மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுவது, ஒன்றிய, நகர பகுதிகளில் பொதுக்கூட்டங்கள் நடத்துவது, வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA 2) பட்டியல் வழங்குவது, கழக ஆக்க பணிகள் குறித்தும் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் உள்ளிட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

## இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள

# அனைத்து மீனவர்களையும் - மீன் பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட உரிய நடவடிக்கை!

### ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சரை வலியுறுத்தி – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

சென்னை. நவ.14–

**இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட உரிய நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ள வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

அதன் விபரம் வருமாறு :-

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 23 மீனவர்கள் 9-11-2024 அன்று இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், இன்று (12-11-2024) நாகப்பட்டினத்தைச் சேர்ந்த 12 மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர். இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட உரிய நடவடிக்கைகளைமேற்கொள்ளுமாறு வலியுறுத்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு 12-11-2024 அன்று கடிதம் எழுதியுள்ளார்.

முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள அக்கடிதத்தில், இலங்கை அதிகாரிகளால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வருவது குறித்து ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சரின் கவனத்தை ஈர்க்க விரும்புவதாகவும், இதுபோன்ற கைது நடவடிக்கைகள் மீனவர்களின் வாழ்வாதாரத்தைச் சீர்குலைப்பதோடு, அவர்களது குடும்பங்களுக்கு பெருத்த துயரத்தை ஏற்படுத்துவதாகவும் கவலையோடு குறிப்பிட்டுள்ளார்.

09.11.2024 அன்று, இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 23 மீனவர்கள் IND-TN-10-MM-958 மற்றும் IND-TN-10-MM-641 ஆகிய பதிவெண்களைக் கொண்ட 2 இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகுகள் மற்றும் பதிவு செய்யப்படாத ஒரு படகில் மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில், இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், 12.11.2024 அன்று, நாகப்பட்டினத்திலிருந்து பதிவெண் IND-TN-06-MM-8478 என்ற மீன்பிடிப் படகில் மீன்பிடிக்கச் சென்றிருந்த 12 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், கடந்த 7 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு, 2024-ம் ஆண்டில் தான் தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் அதிக அளவில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தனது கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

எனவே, தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் இதுபோன்று தொடர்ந்து கைது செய்யப்படுவதைத் தடுக்கவும், கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவாக விடுவிக்கவும் உடனடியாக தூதரக நடவடிக்கைகள் மூலம் முயற்சி களை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களை தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

**மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான**
**திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தூத்துக்குடி மாவட்டச் சுற்றுப்பயணம்**

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க, தூத்துக்குடி மாவட்டத்தில் 14.11.2024 (வியாழக்கிழமை) ஒரு நாள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு.

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 09:30 மணி | தூத்துக்குடி வடக்கு மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களுடன் சந்திப்பு. | சத்யா ரிசார்ட், தூத்துக்குடி. |
| காலை 11:00 மணி | இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் திரு.தங்கபாண்டியன் அவர்களின் இல்லத் திருமண விழா. | ஏ.வி.எம்.கமலவேல் திருமண மண்டபம், எட்டயபுரம் சாலை, தூத்துக்குடி. |
| மதியம் 12:00 மணி | அரசு நலத்திட்டப் பணிகள் ஆய்வு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல். | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தூத்துக்குடி. |
| மாலை 04:30 மணி | கழகப் பவளவிழாவை முன்னிட்டு, தூத்துக்குடி வடக்கு மாவட்டம் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்குதல். | குறிஞ்சி நகர், பிரதான சாலை, கலைஞர் மைதானம், தூத்துக்குடி. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 12-11-2024



## அரசின் நடவடிக்கைகளுக்கு மக்கள் ஒத்துழைப்புத் தர வேண்டும்!

# சென்னையில் மழைநீர் தேங்காமல் துரித நடவடிக்கை!

### ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் ஆய்வினை மேற்கொண்டு – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தகவல்!

சென்னை, நவ.14–

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை, ஒக்கியம் துரைப்பாக்கம், ஒக்கியம் மடுவு நீர்வழிப் பாதையின் இரண்டு கரையோர பகுதிகளிலும் உள்ள தனியார் கல்லூரிகளின் அருகில் கரைகளை அகலப்படுத்தும், சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.11.2024) சென்னை, ஒக்கியம் துரைப்பாக்கம், ஒக்கியம் மடுவு நீர்வழிப் பாதையின் இரண்டு கரையோர பகுதிகளிலும் உள்ள தனியார் கல்லூரிகளின் அருகில் கரைகளை அகலப்படுத்தும், சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்விற்குப் பின்னர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

சென்னை மாநகர் மற்றும் புறநகர் பகுதிகளில் பருவ மழை பெய்துவரும் நிலையில், நம்முடைய முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் இன்று காலை சென்னை மாநகராட்சி அலுவலகம் மற்றும் எழிலகத்தில் உள்ள அவசர கால கட்டுப்பாட்டு மையம் ஆகிய இடங்களில் சென்னை பெருநகர மாநகராட்சி மேயர், துணை மேயர், ஆணையாளர் ஆகியோருடன் நேரில் ஆய்வு செய்தோம்.

நேற்று இரவில் இருந்து பரவலாக மழை பெய்து வருகின்றது. இருந்தாலும், எந்த இடத்திலும் தண்ணீர் தேங்கவில்லை. இந்த நிலையில், தற்போது ஒக்கியம் மடுவு பகுதியில் இன்றைக்கு நேரில் ஆய்வு செய்து உள்ளோம். ஏற்கனவே கடந்த மாதம் 13 ஆம் தேதியன்று இதே இடத்தில் ஆய்வு செய்தோம். ஆகாயத்தாமரைகளை அகற்றினோம். அதனால் பெரிய அளவில் தண்ணீர் தேங்காமல் இருந்தது.

பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் இருந்து வெள்ளநீர் வெளியேறி, இந்த ஒக்கியம் மடுவு வழியாகத் தான், பக்கிங்காம் கால்வாய்க்கு சென்று, பின்னர் அங்கிருந்து கடலில் கலக்கிறது.

ஆனால், இங்கு ஏற்கனவே இருக்கும் நீர்வழித்தடத்தின் அகலம் மாறுபட்ட அளவுகளில் இருந்து வந்தது. தண்ணீர் வெளியேறுகின்ற பாதை குறுகலாக இருந்ததால், வெள்ளநீர் தடையின்றி வெளியேற முடியாத ஒரு சூழல் இருந்தது.

அப்படி வெளியேற முடியாத வெள்ளநீர் அருகில் உள்ள குடியிருப்பு பகுதிகளை சூழ்ந்து கொள்ளும் ஆபத்தும் இருந்தது. எனவே அதுகுறித்து ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்க முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தி இருந்தார்கள்.

அதன்படி, நீர்வளத்துறையினர் ஆய்வு செய்தார்கள். அப்போது, பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் இருந்து ஒக்கியம் மடுவுக்கு இடைப்பட்ட பகுதியில் இருக்கும் தனியார் கல்லூரிக்கு சொந்தமான இடமானது, வெள்ளநீர்வெளியேறுவதற்கு தடங்கலாக இருந்தது கண்டறியப்பட்டது. தற்போது, அனைத்து சட்ட வழிமுறைகளையும் பின்பற்றி சம்பந்தப்பட்ட அந்த தனியார் நிலத்தை அரசு கையகப்படுத்தி உள்ளது. கையகப்படுத்தப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட இடத்தினை தற்போது, அகலப்படுத்தி வருகின்றோம்.

ஏற்கனவே, 80 மீட்டர் அகலம் இருந்த அந்த இடத்தில், நீர் தேங்காமல் உடனுக்குடன் வடிகின்ற வகையில், 130 மீட்டர் அளவிற்கு அகலப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த பணிகள் விரைவில் நிறைவடையவுள்ளன. இப்பணிகள் நிறைவுற்றால், 7 ஆயிரம் கன அடி மட்டுமே தண்ணீர் வெளியேறிய நிலையில் இருந்து, சம்பந்தப்பட்ட இடத்தில் அரசின் துரித நடவடிக்கையால், தற்போது 12 ஆயிரம் கன அடி தண்ணீர் வெளியேறும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

மேலும் தற்காலிக பணியாக அருகிலுள்ள இன்னொரு தனியார் கல்லூரி எதிரே உள்ள மணல் திட்டுகளை ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டில் 5 பொக்லைன் இயந்திரங்களை கொண்டு சீரமைக்கும் பணி, மாநகராட்சி நிதி உதவியுடன் நடைபெற்று வருகிறது.

இந்த இரு பணிகளையும் விரைவாக முடிக்க அதிகாரிகளை அறிவுறுத்தி இருக்கின்றோம். இன்னும் மூன்று அல்லது, நான்கு நாட்களில் அனைத்து பணிகளும் முடிவடைந்து விடும்.

ஆகவே, திராவிட மாடல் அரசை பொறுத்தவரை, முதலமைச்சர் அவர்களை பொறுத்தவரை சென்னையில் தண்ணீர் தேங்காமல் இருப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றார். பொதுமக்களும் அரசின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. மணிவாசன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், தெற்கு வட்டார துணை ஆணையாளர் எம்.பி.அமித், மண்டலக்குழுத் தலைவர்கள் வி.இ.மதியழகன், எஸ்.வி.ரவிச்சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் விராலிமலை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட விராலிமலை மத்திய ஒன்றிய பாக முகவர்கள் (BLA2) ஆலோசனைக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் மாவட்ட அவைத்தலைவர் அரு.வீரமணி, மாவட்ட பொருளாளர் புதுக்கோட்டை துணை மேயர் எம்.லியாகத் அலி, ஒன்றிய செயலாளர் கே.பி.அய்யப்பன் ஆகியோர் முன்னிலையில் விராலிமலை மாலா மங்கள மஹாலில் நடைபெற்றது. விராலிமலை சட்டமன்றத் தொகுதி பார்வையாளர், கழக மருத்துவரணி துணைச் செயலாளர் தஞ்சாவூர் துணை மேயர் டாக்டர் அஞ்சுகம் பூபதி தேர்தலில் பாக முகவர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார். நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர் தென்னனூர் எம்.பழனியப்பன், மாநில விவசாய தொழிலாளர் அணி துணை தலைவர் த.சந்திரசேகர், மாவட்ட கவுன்சிலர் கை. பழனிச்சாமி, ஒன்றிய அவைத்தலைவர் செந்தில்நாதன் உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் பங்கேற்றனர்.



துறையூர் சட்டமன்றத் தொகுதி வாக்குச் சாவடி பாக முகவர் ஆலோசனைக் கூட்டத்தில் துறையூர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் தங்க கமல் பேசினார். அருகில் துறையூர் எம்.எல்.ஏ. ஸ்டாலின் குமார் முசிறி எம்.எல்.ஏ. காடுவெட்டி தியாகராஜன் ஆகியோர் உள்ளனர்.